# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097161

1. District : கடலூர் மாவட்டம்  PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம்  Year: 2018 ஆண்டு  FIR No.: 5/2018 மு.த.அ. எண்  Date: 12.07.2018 நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம், 1988  Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : 10.07.2018 நாள் முதல்  Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு  Time from : 1100 hrs நேரம் முதல்  Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : 12.07.2018 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்  Time : 0930 hrs நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) Vol - II பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : 0930 hrs நேரம்

4. Type of Information : Written/ Oral : எழுத்து மூலம்
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லால்பேட்டை. காட்டுமன்னார்கோயில் வட்டம், கடலூர் மாவட்டம். 70 கி.மீ. தென்மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P S -- District --
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : ரா. இளஞ்செழியன்
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
   (b) Father's/ Husband's Name : ராமலிங்கம் தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : இந்தியன் நாட்டினம்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : சிறு வியாபாரி தொழில்  (g) Address : முகவரி நெ.218, M.G.R. நகர், ராயநல்லூர், கொள்ளுமேடு அஞ்சல், காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   தமிழ் இனியன், வணிக ஆய்வாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், லால்பேட்டை. காட்டுமன்னார்கோயில் வட்டம், கடலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

12.07.2018 ந்தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்த போது காலை சுமார் 09.30 மணிக்கு R.இளஞ்செழியன், த/பெ. ராமலிங்கம், நெ.218, M.G.R. நகர், ராயநல்லூர், கொள்ளுமேடு அஞ்சல், காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புனர், R. இளஞ்செழியன், த/பெ. ராமலிங்கம், நெ.218, M.G.R. நகர், ராயநல்லூர், கொள்ளுமேடு அஞ்சல், காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, கடலூர் மாவட்டம். பெறுநர், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கடலூர். அய்யா, நான் காட்டுமன்னார்கோயில் தாலுக்காவிலுள்ள பூர்த்தங்குடியில் எனது சொந்த இடத்தில் புதிதாக சிறிய ஒரு கட்டிடத்தில் மூன்று கடைகள் கட்டியுள்ளேன். அதில் ஒரு கடையில் கடந்த ஒருமாத காலமாக பெட்டிக்கடை வைத்து நடத்திவருகிறேன். மேற்படி நான் நடத்திவரும் பெட்டி கடை கட்டிடத்தை 2017ம் ஆண்டு ஜனவரியில் கட்ட ஆரம்பித்து 2018

*(இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)*

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
12/7/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. Samuel
Rank: நிலை Inspector No. எண் .........

பிப்ரவரி மாதம் தான் மேற்கூரை ஒட்டி ஓரளவு கட்டிடப்பணியை முடித்தேன். பின்னர் கடந்த ஜுன் 2018 முதல் மேற்படி கட்டிடத்தில் உள்ள ஒரு கடையில் மின் இணைப்பு இல்லாமல் மண்ணெண்ணை விளக்கொளியில் பெட்டிக்கடை நடத்தி வருகிறேன். நான் எனது கடையை கட்டிக்கொண்டிருக்கும்போதே நான் பெட்டிக்கடை நடத்திவரும் ஒரு கடைக்கு தற்காலிக மின் இணைப்பு வேண்டி, லால்பேட்டை தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்தில் கடந்த 2017ம் ஆண்டு அக்டோபர் மாதம் (தேதி சரியாக ஞாபகம் இல்லை) மேற்படி அலுவலகத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரியும் திரு.தமிழ் (எ) தமிழ் இனியன் என்பவரிடம் மனு கொடுத்தேன். அப்போது அவர் என்னிடம் எனது மனுவை பெற்றுக்கொண்டு கடை கட்டும் இடத்தை ஆய்வுசெய்ய வருவதாக கூறி என்னை அனுப்பிவிட்டார். பின்னர் ஜனவரி 2018ல் கடைக்கான கட்டுமானப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நான் மின் இணைப்பு வேண்டி மனு கொடுத்த மேற்படி வணிக ஆய்வாளர் தமிழ் இனியன் மற்றும் சில அதிகாரிகள் எனது இடத்திற்கு வந்து எனது பெட்டிக்கடையை பார்வையிட்டு சென்றுவிட்டனர். பின்னர் எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நான் எனக்குறிய மின் இணைப்பு சம்மந்தமாக லால்பேட்டை மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்று கேட்க முடியவில்லை. பின்னர், கடந்த 05.07.2018 மற்றும் 06.07.2018 அன்று மேற்படி மின்சார அலுவலகம் சென்றபோது, வணிக ஆய்வாளர் தமிழ்இனியன் அலுவலகத்தில் இல்லாததால் அவரை பார்க்க முடியவில்லை. மேலும், கடந்த 07.07.2018 அன்று மேற்படி மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்றபோது அங்கு வணிக ஆய்வாளர் தமிழ் இனியன் அலுவலகத்தில் இருந்தார். அவரிடம் எனது மின் இணைப்பு சம்மந்தமாக கேட்டபோது அவர் என்னிடம் எனது கடைக்கு மீட்டர் பாக்ஸ் வைப்பதற்கான செலவு தொகை ரூ.1600/– கேட்டார். நான் உடனே என்னிடம் இருந்த ரூ.1600/–ஐ அலுவலகத்தில் இருந்த A.E. முன்னிலையில் தமிழ் இனியனிடம் கொடுத்தேன். உடனே A.E அவர்கள் தமிழ் இனியனிடம் மீட்டர் பாக்ஸ்க்காக என்னிடம் வாங்கிய பணத்திற்கு உடனடியாக இரசீது கொடுத்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் தமிழ் இனியன் என்னிடம் பணத்தை வாங்கிக்கொண்டு A.E. ரூமில் உள்ள கம்ப்யூட்டரில் எனக்கு இரசீது கொடுக்க முயற்சித்தபோது கணினி சரியாக வேலை செய்யவில்லை என்றும், அதனால் என்னை திங்கட்கிழமை (09.07.2018) வாங்க இரசீது தருகிறேன் என்று கூறி அனுப்பிட்டார். பின்னர் நான் 09.07.2018ம் தேதி மீண்டும் லால்பேட்டை EB அலுவலகத்திற்கு சென்று தமிழ் இனியனை சந்தித்தபோது அவர் என்னிடம் நீங்கள் கொடுத்த உங்க இடத்திற்காக ஏற்கனவே விண்ணப்பத்துடன் கொடுத்த பூர்த்தங்குடி VAO சான்று செல்லாது ஆகையால் புதிதாக

12/7/18

இன்றைய தேதியில் VAO சான்று வாங்கிவரும்படி என்னிடம் கூறினார். நான் உடனே பூர்த்தங்குடி VAO அலுவலகத்திற்கு 09.07.2018 அன்றே சென்று பூர்த்தங்குடி VAO செல்வி. சிவகங்கை என்பவரை சந்தித்து என் இடத்திற்கான மின் இணைப்பு தொடர்பான சான்று பெற்று மறுநாள் 10.07.2018 அன்று காலை 11.00 மணிக்கு மீண்டும் தமிழ் இனியனை அவரது அலுவலகத்திற்கு சென்று சந்தித்து VAO சான்றை அவரிடம் கொடுத்தேன். அப்போது தமிழ் இனியன் நான் கொடுத்த VAO சான்றை பெற்றுக்கொண்டு என்னிடம் "உங்க கடைக்கு புது கணைக்ஷன் கொடுக்க கொஞ்சம் செலவாகும் உனக்கு புரியாதா, தேவையில்லாம எதுக்கு அலையிற, 5000 ரூபாய் என்னிடம் கொடு உடனே மேலதிகாரியிடம் சொல்லி உனக்கு புது கணைக்ஷன் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் அதுவரை உன்னுடைய விண்ணப்பம் என்னிடம்தான் இருக்கும்" என்று சொன்னார். உடனே நான் அவரிடம் எனது குடும்ப சூழ்நிலையையும் அதிக வருமானம் இல்லாமல் கஷ்டப்படும் நிலைமையும் எடுத்துக்கூறி என்னால் தமிழ்இனியன் கேட்ட லஞ்சப் பணம் ரூ.5000/– கொடுக்க இயலாத சூழ்நிலையை எடுத்து விளக்கிக் கூறினேன். ஆனால், அவர் என்னுடைய சூழ்நிலையை புரிந்துகொள்ளாமல், பணம் ரூ.5000/– என்னிடம் கொடுத்தால்தான் புது கணைக்ஷன் கொடுக்க முடியும் இல்லையேல் நீ அலைந்து கொண்டுதான் இருக்கனும் என்று கூறிவிட்டு அலுவலகத்தில் இருந்து சென்றுவிட்டார். எனக்கு மேற்படி தமிழ் இனியன் கேட்ட லஞ்சப்பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் நான் இன்று 12.07.2018 ந்தேதி தங்களிடம் புகார் கொடுத்தேன். விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன், இப்படிக்கு Sd/- R.இளஞ்செழியன், S/o இராமலிங்கம், 12/7/2018. அய்யா, நான் இன்று 12.07.2018 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது மேலே கண்ட புகாரின் வாதி R.இளஞ்செழியன் என்னிடம் கொடுத்த லஞ்ச புகார் சம்மந்தமான புகார் மனுவை பெற்று பின்னர் வாதியிடம் புகாரில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக விசாரித்தேன், மேலும் மேற்படி புகாரின் உண்மை தன்மையை ஆராய முதல்நிலை விசாரணை வேண்டி புகாரின் நகலை சென்னை DVAC க்கு 10.30 மணிக்கு அனுப்பி வைத்தேன். Sd/- (M.Sathish). இன்று 12.07.2018 பகல் 11.30 மணிக்கு வாதி கொடுத்த மேற்படி புகாரின் மீது PE 207/2018/TANGEDCO/CL dated : 12.07.2018 ன்படி முதல்நிலை விசாரணை செய்ய அனுமதி கிடைத்தது. பின்னர் நான் வாதியுடன், அவர் கொடுத்த புகார் சம்மந்தமாக முதல்நிலை விசாரணை செய்ய வாதி கொடுத்த புகாரில் குறிப்பிட்டுள்ள சம்பவ இடத்திற்கு புறப்பட்டு செல்கிறேன். Sd/- (M.Sathish). இன்று

14/7/18

12.07.2018 பகல் 12.00 மணிக்கு நான் PE 207/2018/TANGEDCO/CL சம்மந்தமாக முதல்நிலை விசாரணை செய்ய வாதியுடன் புறப்பட்டு புகாரில் குறிப்பிட்டுள்ள சம்பவ இடமான காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, லால்பேட்டை மின்சார வாரிய அலுவலகத்திற்கு அருகே வாதியை தனியாக ஒரு இடத்தில் நிற்க வைத்துவிட்டு, பின்னர் நான் வாதி என்னிடம் கொடுத்திருந்த லஞ்ச புகாரின் உண்மை தன்மை பற்றியும், மேலும் வாதி புகாரில் குறிப்பிட்டுள்ள குற்ற அலுவலரான தமிழ் (எ) தமிழ்இனியன் என்பவரின் செயல்பாடுகளை பற்றியும் ரகசிய விசாரணை செய்தேன். என்னுடைய ரகசிய விசாரணையில் குற்ற அலுவலர் தமிழ்இனியன் என்பவர் வாதியின் புதிய கடைக்கு தற்காலிக மின் இணைப்பு கொடுக்க வாதியிடம் லஞ்சமாக ரூ.5,000/- கேட்டது உறுதி செய்யப்பட்டது. மேலும் குற்ற அலுவலர் தமிழ்இனியனுக்கு வாதி லஞ்சமாக பணம் கொடுக்காததால், வாதியின் கடைக்கு தற்காலிக மின் இணைப்பு வேண்டி கொடுத்த மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுக்காமல், கடந்த ஆறு மாதத்திற்கு மேலாக குற்ற அலுவலர் வாதி கொடுத்த புதிய மின் இணைப்பு வேண்டி கொடுத்த மனுவினை தானே வைத்திருப்பது உறுதி செய்யப்பட்டது. பின்னர் நான் வாதியை அழைத்து குற்ற அலுவலர் தமிழ்இனியன் அவரிடம் லஞ்சமாக கேட்ட ரூ.5,000/- எடுத்து கொண்டு 13.07.2018 அன்று காலை 09.00 மணிக்கு கடலூர் ஊ.த.க அலுவலகத்திற்கு வந்து என்னை சந்திக்குமாறு அனுப்பி வைத்தேன். பின்னர் நான் அங்கிருந்து புறப்பட்டு கடலூர் ஊ.த.க அலுவலகத்திற்கு வந்து வாதி கொடுத்த புகாரில் பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பது என்னுடைய முதல் நிலை விசாரணையில் உறுதி செய்யப்பட்டதால் வாதி என்னிடம் கொடுத்த புகாரின் மீது இன்று 12.07.2018 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு கடலூர் ஊ.த.க பிரிவு குற்ற எண். 05/2018 u/s 7 of PC Act படி வழக்கு பதிவு செய்தேன். Sd/- (M.Sathish) இதன் அசலை வாதியின் புகார் மனுவுடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது. Sd/- (M.Sathish)

12/7/18